செ.வெ.எண்.06 நாள்: 01.09.2017

**திருநெல்வேலி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் நோய்த்தடுப்பூசி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்**

திருநெல்வேலி மாவட்டம், மேலநீலிதநல்லூர் ஒன்றியம், கூவாச்சிபட்டி கிராமத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் நோய்த்தடுப்பூசி முகாம் தொடக்க நிகழ்ச்சி இன்று (01.09.2017) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள், கலந்து கொண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் நோய்த்தடுப்பூசி முகாமினை தொடங்கி வைத்தார். பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் கால் மற்றும் வாய் நோய்த்தடுப்பூசி திட்டத்தின் 13-வது சுற்று தடுப்பூசிப் பணிகள் **செப்டம்பர் 1 முதல் 21-ம் தேதி** வரை தமிழகம் முழுவதும் நடைபெறுகின்றது. திருநெல்வேலி மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ், 2,87,335 பசுக்களுக்கும், 16,715 எருமை மாடுகளுக்கும் மொத்தம் 3,04,050 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்படவுள்ளது. இப்பணிகளுக்காக கால்நடை உதவி மருத்துவர்கள் தலைமையில் 80 குழுக்கள் அமைக்கப்பட்டு தங்களது கிராமத்திற்கு தடுப்பூசி போடக் கால்நடை துறையின் மூலம் மருத்துவக்குழுக்கள் வரும்போது கால்நடை வளர்ப்போர் தவறாமல் தங்கள் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட வேண்டும். இதன் மூலம் நமது மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் நோய் இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

முன்னதாக, 15 பயனாளிகளுக்கு கால்நடை பசுந்தீவனம் மற்றும் ஊட்டச்சத்து பாக்கெட்டுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இம்முகாமில், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம்பகவத்,இ.ஆ.ப., கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் திரு.ராஜேந்திரன், கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி துணை இயக்குநர் திருமதி.பிரேமா, கால்நடை உதவி இயக்குநர்கள் திரு.ஆறுமுகபெருமாள், திரு.சங்கரகுமார், ஆவின் பொது மேலாளர் திரு.அருணகிரிநாதன், ஆவின் மேலாளர் திரு.சுந்தரம், கால்நடை உதவி மருத்துவர் மலர்கொடி மற்றும் அலுவலர்கள், விவசாயிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.